# இரட்சிப்பு

## RATCHIPPU

RATCHIPPU = SALVATION



Volume-12 | December-2022 | Issue-07

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-




## இயக்குநர் கடிதம்...

From Mssion Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைத்து திருச்சபை விசுவாசிகளுக்கும் எங்கள் அன்பான ‘கிறிஸ்துமஸ்’ நல்வாழ்த்துக்கள். பல்வேறு பெருந்தொற்று மற்றும் நோய் பரவலில் இருந்து கடவுள் நமக்கு பாதுகாப்பு அளித்து பண்டிகை காலத்தின் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறார் அவருக்கு கோடாகோடியாய் நன்றிபலிகளை செலுத்துவோம். தமிழ்நாட்டிலுள்ள அரசியல் குழப்பங்கள் மாற, மதவெறி கலாச்சாரமும், பிரிவினைவாத கலச்சாரமும் முற்றிலும் வேரறுக்கப்பட இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து கருத்துடன் ஜெபித்திட அன்புடன் அழைக்கிறோம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழிய நிகழ்ச்சிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். நமது கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயல்படும் நமது **GOOD TIDINGS - RATCHIPPU HOME** வலைதள ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இம்மாத ‘ஜெப-ஜன்னல்’ ஜெபங்கள் 9, 16, 23 தேதிகளில் நடைபெறும். ‘அனைவரும்-ஊழியத்தில்’ - கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து கைப்பிரதி விநியோகப் பணியில் உதவிட அனைவரையும் அழைக்கிறோம்.

வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 12-ல்). தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா


**வேத-வரிகள்-143** **மத்தேயு 18:2,3**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| பராபரன், தம் ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு, அவரையே கொடுத்து, இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாயிருந்தார். | தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். | தேவன், இவ்வுலகை பெரிதும் நேசிக்கிறார். தமது ஒரே குமாரனை இதற்காகத் தந்தார். தன் மகனைத் தந்ததால் அவரில் நம்பிக்கை வைக்கிற எவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறுவர். |


வசன தியானம் - 138

# கிறிஸ்மஸ் என்றால் அன்பு



John-3:16

## அன்பு
## என்றால் இயேசு



யோவான்-3:16

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான்-3:16


யோவான்-3:16, நீண்ட காலமாக ஒரு சக்திவாய்ந்த, சுருக்கமான, கிறிஸ்மஸ் அன்பின் அறிவிப்பாக கொண்டாடப்படுகிறது. திருமறையின் 31,373 வசனங்களில், கிறிஸ்துமஸை விவரிக்கும் உண்மையான ஒற்றை வசனம் இதுவே.

கடவுளுடைய அன்பின் அளவை நாம் கிறிஸ்துமஸில் உணர்கிறோம். அதுதான் கிறிஸ்துமஸ்-அன்பு. கிறிஸ்துமஸ் என்பது ஒரு அன்பின் பரிசு. ஒருவருக்காக ஏதாவது செலவு செய்தால் அதை நாம் அன்பின் வெளிப்பாடு என்கிறோம்.

அப்படியானால், கடவுள் நமக்காக (மனுக்குலத்துக்காக) மிகவும் விலையுயர்ந்த பொருளைக் கொடுத்தது கடவுள் நம்மீது வைத்த அன்பின் வெளிப்பாடு. அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனையே கொடுத்தார் (செலவு செய்தார்). தமது ஒரே மகன். அது தான் உண்மையான அன்பு - 'கிறிஸ்துமஸ் அன்பு'.

கடவுள் கொடுத்த 'கிறிஸ்துமஸ்-அன்பு' எனப்படும் பரிசு அல்லது வரம், நமது இரட்சகராகிய இயேசுவே. இயேசுவை விசுவாசிக்கும்வரை உலகம் அந்த அன்பைப் பெறவோ பயனடையவோ முடியாது என்பதை உணர்த்துவதே கிறிஸ்துமஸ் பண்டிகை. இயேசுவை விசுவாசிப்பது என்பது, கிறிஸ்து மேல் நம்பிக்கை வைத்து, சார்ந்து, அவரை ஒட்டிக்கொள்வது என பொருள்படும். நாம் கடவுளை-கிறிஸ்துவை நம்பி, அவரைச் சார்ந்து வாழும்போது, அவருடைய கிறிஸ்துமஸ் அன்பாகிய இயேசுவிடமிருந்து இரட்சிப்பு என்னும் நிறைவாழ்வைப் பெற்று வாழ முடியும். எனவே, கிறிஸ்துமஸ் பண்டிகை காலங்களில் கடவுளுடைய அன்பாகிய கிறிஸ்து பிறப்பின் நோக்கத்தை நாம் கற்றுக்கொள்கிறோம். கடவுளின் அன்பு உண்மையில் மனிதனை நித்திய அழிவிலிருந்து காப்பாற்றுகிறது.

சுய-முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளையோ, தனிப்பட்ட லாபத்திற்கான யோசனைகளையோ இயேசு வழங்கவில்லை. மாறாக, ''என்னிடம் வாருங்கள், என்னை விசுவாசியுங்கள் நான் உங்களைக் விடுவிக்கிறேன்.'' என்கிறார். மக்கள் மத்தியில் நாம் பெறும் அன்பு மங்கலாம் அல்லது மாறலாம், ஆனால் கடவுளின் அன்பு ஒருபோதும் மாறாது. இந்த கிறிஸ்மஸ் காலத்தில் இறை-அன்பின் ஆழத்தை கிறிஸ்மஸ்-அன்பில் நாம் கற்றுக்கொள்வோம். நித்திய ராஜ்யம் சேர்க்கும் வரை கடவுள், நம்மைத் தம் அன்பில் இணைத்து நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

கிறிஸ்மஸ் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு
டி. மோகன்ராஜ்

# நல்லாட்சியும் நிலையாட்சியும் தரும் ஆண்டவரின் பிறப்பு

ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும். ஏசாயா– 9:6


## Rev. D. Mohanraj

Presbyter-in-Charge and Chairman, CSI Church of the Holy Spirit
Saligramam Pastorate, Diocese of Madras, Chennai, South India


கிறிஸ்துவுக்குள் அன்பான இரட்சிப்பு இதழ் வாசகர்களுக்கு பெத்தலைப் பாலன் இயேசுவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துக்கள். மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பின் காலங்களில் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய சூழலில் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் என அனைவரும் சுயநலத்தோடு செயல் படுவதை அதிகமாக பார்க்கிறோம். ஒருசிலர் பொதுநலனை முன்வைத்து செயல் பட்டாலும் தன்னலம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். இதற்கு கிறிஸ்தவமும் விதிவிலக்கல்ல. இவ்விதத்தில் மக்கள் பாதிக்கப்பட்டு, நல்லாட்சியை எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. எனவேதான் நமது ஆண்டவர் கற்பித்த இறைவேண்டலில்கூட "உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண் ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக!" (மத்-6:10) என்றார். இந்த சிந்தனையின் அடிப்படையில் கிறிஸ்து பிறப்பு தொடர்பான சில கருத்துக் களை உங்களோடு பகிர்ந்துக்கொள்கிறேன்.

1. நமக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளார்: இது உறவையும், உரிமையையும் உணர்த்தும் ஒன்று. இந்த உறவும் உரிமையும் அனைவருக்குமானது மேலும் தன்னலத்திற்கு எதிரானது. சொந்த உறவுகளையே இழந்து நிற்கும் சூழலில் எல்லோருக்கும் கடவுளை 'அப்பா' என்று அழைக்கும் உறவையும் உரிமையை யும் கொடுத்து அதை பாதுகாக்கும் குழந்தைதான் இயேசு. இந்தக் குழந்தையை உரிமை கொண்டாடும் எவரும், எல்லோரையும் சமமாக மதித்து வேறுபாடுகள் இன்றி அன்புகூறுவர். இவ்வுலகில் பின்பற்றப்படும் எந்த வேறுபாடும் இயேசு என்ற குழந்தையை நேசிக்கும் அன்பர்களிடம் இல்லை. இவ்வுறவின் பண்புகள்:

அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகிய தூய-ஆவியின் கனியே ஆகும். ஏனெனில் கிறிஸ்துவுக் குரியவர்கள் தங்கள் ஊனியல்புகளை சிலுவையில் அறைந்து விடுவார்கள். எனவே, இவ்வாண்டின் ‘கிறிஸ்மஸ்’ திருநாளில் மகிழ்ந்து களிகூறுவோம். இவ்வுலகில், இல்லாமை இயலாமை கல்லாமை மற்றும் அறியாமையில் வாழும் மக்களிடம் அன்பு காட்டி, நம் வாழ்வை அவர்களோடு பகிர்ந்துக்கொள்வோம்.

2. ஆட்சி பொறுப்பு மிகுந்த பிறப்பு: இஸ்ரவேலிலே அரசர் என்பவர் குடும்ப பொறுப்புமிக்க ஒரு மூத்த சகோதரருக்கு சமம். தன் குடிமக்களுக்கு உணவு, இருப்பிடம், பாதுகாப்பு அளிப்பது அவரது கடமை. அனைத்திற்கும் மேலாக, எதிரிகள், தீய-சக்திகள் மற்றும் பாவத்தி லிருந்து தம் மக்களை மீட்பது அரசரின் கடமையாகும். கிறிஸ்துவின் ஆட்சி என்றென்றும் நிலைத்திருக்கும், அவர் நம் சகோதரர். கடவுள் நம் தந்தை என்பதை அறிவிக்கவே கிறிஸ்து பிறந்தார். ஒருவர்மேல் ஒருவர் அதிகாரம் செலுத்துவதால் துன்பம் விளைகிறது (பிர-8:9), கடவுள் கொடுக்கும் அதிகாரம் அழிவுக்காக அல்ல மாறாக வளர்ச்சிக்காகவே என்பதை உணர்ந்து அதிகாரம் வகிப்போர் மக்கள் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் (2கொரி-10:8). ‘‘நமது போராட்டம் மனிதர்களோடு மட்டுமல்ல. ஆட்சி புரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருண்ட இவ்வுலகின்மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய-ஆவிகள் ஆகியவற் றோடும் போராடுகிறோம்.’’ என பவுல் கூறுகிறார். எனவே இவ்வுலக ஆட்சிகள் மக்களை ஒடுக்கும் சக்திகளாக, அடிமைத்தனத்திற்கு வழிவகுப்பனவாக, வாழ்வாதரங்களை சுரண்டு பவைகளாக, மக்களை பிளவுபடுத்தும் சக்திகளாக மாறிவருவதை உணர்ந்து, கிறிஸ்துவின் வழியில்இழிநிலை, பாவநிலையிலிருந்து அவர்களை மீட்க செயல்படுவோம்.

3. ஆலோசனை, வலிமை, அமைதி தரும் பிறப்பு: கிறித்துவின் பிறப்பில் அவருக்கு கொடுக்கப்படும் பெயர்கள் முக்கியதுவம் மற்றும் அர்த்தம் உள்ள வைகளாக இருக்கின்றன. ஏசாயா தீர்க்கர் வியதகு-ஆலோசகர், வலிமை-மிகு இறைவன் என்றுமுள்ள-தந்தை, அமைதியின்-அரசர் ஆகிய நான்கு பெயர்களை தருகிறார். நற்செய்தி நூல்கள் இம்மானுவேல், இயேசு மற்றும் கிறிஸ்து என அவருடைய பெயர்-மகத்துவங்கள் விவரிக்கின்றன. இப்பெயர்கள் நமக்கு ஆலோசனை, வலிமை, அமைதி, அருட்பொழிவு தந்து ஆண்டவரோடு இணைந்து வாழும் அருளைத் தருகிறது. இதைத்தான் வானதூதர், ‘‘அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக் கிறேன்.’’ என்றார். பிரச்சனை, குழப்பம், போராட்டம், வேலை வாய்ப்பு இன்மை போன்ற நிலைகளில் கிறிஸ்துவானவர் ஆலோசகராக நம்முடன் இருந்து அமைதி யையும் நல்வாழ்வையும் தர பிறந்திருக்கிறார். ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு வாழ்விழந்து இருக்கும் மக்களுக்கு தந்தையாக வலிமை, அமைதி தந்து வாழ்விக்க கிறிஸ்து பிறந்திருக்கிறார். கிறிஸ்துவை அறிந்து கொள்ள விருப்பமில்லாமல் நற்செய்திக்கும், நல்வாழ்வுக்கும் தடையாய் இருக்கும் மக்களுக்கு இருள் நீக்கும் ஒளியாய் பிறந்திருக்கிறார். அவ்வாறே நாமும் பெயர் கிறிஸ்தவர்களாக வாழாமல், நாம் தியானித்த பிரகாரம் பிறர் வாழ்வுக்கு ஒளியூட்டும், வலிமையூட்டும், மகிழ்ச்சியூட்டும் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து நற்கனிகளால் சான்று பகர்வோம். அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. டி. மோகன்ராஜ்

கிறிஸ்மஸ் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு
எஸ். பிரான்சிஸ் தேவதாஸ்

# அர்ப்பணிப்பின் கிறிஸ்துமஸ்

மரியாள் வான–தூதரிடம்: இதோ, “நான் ஆண்டவரின் அடிமை. உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார். லூக்கா–1:38

யோசேப்பு, வான–தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும்வரை யோசேப்பு அவரோடு உறவு கொள்ளவில்லை. யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார். மத்தேயு–1:24,25


## Rev. S. Francis Devadoss

**Presbyter-in-Charge and Chairman, CSI Christ Church**

**Alandur Pastorate, Diocese of Madras, Chennai, South India**


கிறிஸ்துவுக்குள் பேரன்புடையீர்!

இன்றுவரை நம்மை நேசித்து நம்மோடு என்றும் வாழும் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். கடவுளின் பேரருளி னால் இவ்வாண்டிலும் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் பிறப்பினைக் கொண்டாட ஆயத்தப்படுகிறோம். இந்நாட்களில், ஆண்டவர் நம் உள்ளத்திலும் இல்லத்திலும் பிறக்க நம்மை அர்ப்பணிப்பது அவசியமாகும். கிறிஸ்துவின் பிறப்பில் பங்குபெறுவ தற்காக கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட மரியன்னை மற்றும் யோசேப்பு ஆகியோ ரின் அர்ப்பணிப்பை குறித்து சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

1. கடவுளின் திருவிருப்பத்துக்கு அர்ப்பணிக்கும் வாழ்வு:

கிறிஸ்து நமக்குள்ளாக வாழ்கிறார் என்ற உண்மையை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்? கடவுளின் திருவிருப்பத்தை நமது வாழ்வின் நிறைவேற்றும் செயல்பாடு மட்டுமே அதற்கு சாட்சியாக அமையும். திருமணத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த மரியாளும் யோசேப்பும் திருமணத்துக்கு முன்பாகவே கடவுளின் விருப்பத்தை அறிந்து அதற்கு தங்களை ஒப்புக்கொடுக்கின்றனர். மரியாளிடம், “இதோ, நீர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்.” (லூக்-1:21) என்ற செய்தி இறை-தூதுவரால் அறிவிக்கப்பட்டபொழுது மரியாள் தன் மனதில் எழுந்த பல்வேறு கேள்விகள் மற்றும் போராட்டங்களின் மத்தியிலும், “இதோ, நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு ஆகட்டும்.” (லூக்-1:28) என்று உலகத்தைப்பற்றியோ, பிறர் என்ன நினைப்பார்கள், என்ன சொல்வார்கள் என்பவற்றைப்பற்றியோ எண்ணாமல், கடவுளின் விருப்பத்துக்கு தன்னை

முழுமையாக அர்ப்பணிக்கிறார். அதேபோல் யோசேப்பும், இச்செய்தியை கடவுளின் தூதன் அறிவித்தபொழுது, தன்னை கடவுளின் விருப்பத்துக்கு அர்பணித்து மரியாளை தன் மனைவியாக ஏற்றுக்கொள்கிறார் (மத்-1:24). இன்றும் நாம் மரியாள் மற்றும் யோசேப்பைப் போன்று கடவுளின் விருப்பம் என்ன என்பதை தூய-ஆவியானவர் நமக்கு உணர்த்தும்பொழுது அதை ஏற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். உலகத்துக்குப் பயந்து கடவுளின் விருப்பத்துக்கு எதிராக மாறிவிடாமல் கடவுளின் விருப்பத்துக்கு அர்ப்பணிக்கும்பொழுது கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்வோம்.

2. இறைவிருப்பத்துக்காக துன்பங்களை ஏற்கும் துணிவு:

இறைவிருப்பத்துக்கு நம்மை அர்ப்பணிப்பதால் வரும் துன்பங்களையும் அவமானங் களையும் ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாய் இருக்கவேண்டும். மரியன்னையும் யோசேப்பும் குழந்தை இயேசுவை பெற்று வளர்த்து பாதுகாத்த நிலைகளில் பல்வேறு துன்பங்களையும் அவமானங்களையும் ஏற்றுக்கொண்டனர். பிள்ளையை பெற்றெடுக்க இடமின்றி அகதிகளாய் தவித்தனர். அடிப்படை வசதி இல்லாத இடத்தில் பிள்ளையைப் பெற்றெடுத்தனர். இன்றும், போர் மற்றும் வறுமையினால் ரஷ்யா, உக்ரைன், இலங்கை, சிரியா, ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து அகதிகளாக, அடிப்படை வசதிகள் எதுவுமின்றி, குளிரிலும் மழையிலும் வெயிலி லும் எத்தனையோ குழந்தைகள் பிறக்கிறார்கள். குழந்தையின் உயிருக்கு ஆபத்து என்றவுடன் அன்று மரியன்னையும் யோசேப்பும் உணவுக்காக, உயிருக் காக போராடிக்கொண்டு எகிப்துக்கு அகதிகளாகச் சென்றனர். இவ்வாறு, கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும்படி பாடுகள், துன்பங்கள், அவமானங்களை ஏற்று துணிவுடன் செயல்பட்டனர். இன்று கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நாம் கிறிஸ்துவுக்காக என்ன பாடுகளை அனுபவிக்கிறோம் என்பதை சிந்திக்க அழைக்கப்படுகிறோம். அன்று, அவர்களது அர்ப்பணிப் பால் மனுக்குலத்துக்கு ‘மீட்பு’ கிடைத்தது. இன்று, நம் வாழ்வை சீர்தூக்கிப் பார்ப்போம்.

3. இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் நிலை:

மரியன்னையும் யோசேப்பும் குழந்தை இயேசுவை கருவில் சுமந்தது முதல், அவரை முதன்மைப்படுத்தி இருக்கிறார்கள். தங்களை மேன்மைப்படுத்திக் கொள் வதற்கோ, தங்களின் சுயநலத்துக்காகவோ அவர்கள் இயேசுவைப் பார்க்காமல், கடவுள் அளித்த வார்த்தை இயேசுவின் வடிவில் நிறைவேற தங்களை அல்ல, இயேசுவையே முதன்மைப்படுத்தினர். இன்று கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நம் வாழ்வும் கொட்டாட்டமும் யாரை முதன்மைப்படுத்துகிறது? என்பதை சற்றே சிந்திப்போம். இயேசுவோடு இறுதிவரை பயணித்த மரியன்னை, அவரே ‘உலக மீட்பர்’ என்பதை உலகிற்கு உணர்த்தினார். இன்று நாம், உண்மையாகவே இயேசுவுடன் பயணிக்கிறவர்கள் என்றால், நம் வாழ்விலும் செயலிலும் இயேசுவை முதன்மைப்படுத்துவோம். இயேசுவே வாழ்வின், அன்பின், அருளின், அமைதியின், சமத்துவத்தின் ஆண்டவர் என்பதை பறைசாற்றி ஆண்டவர் அருளும் வாழ்வை கொண்டாடுவோம். அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துகள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. எஸ். பிரான்சிஸ் தேவதாஸ்

வேத ஆராய்ச்சி - 67



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

**Author: Rev. Dr. D. Suresh Rajan**

**சங்கீதம் – 67**

**Episode - 67**

**Rev. Dr. D.** சுரேஷ் ராஜன்

இரட்சிப்பு வாசகர்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள். ஆண்டவரின் அளவற்ற கிருபையினால் கிறிஸ்து பிறப்பை நாம் கொண்டாடி மகிழவும், கிறிஸ்து தரும் நித்திய வாழ்வை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவும் நமக்கு மற்றொரு தருணம் கொடுக் கப்பட்டுள்ளது. இந்த வருடம் முழுவதும் தேவகிருபை நம்மைக் காத்துக்கொண்டதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த ஆண்டின் இறுதி மாதத்தில் நாம் தியானிக் கும் இந்த சங்கீதம் 67, இன்றைய நமது சூழ்நிலைக்கு மிகவும் ஏற்புடையதாயும் ஆறுதல் அளிப்பதாயும் உள்ளது. இச்சங்கீதத்தில் மொத்தம் ஏழு வசனங்களே உள்ளன. ஆயினும் இவை தாவீதரசரின் உள்ளத்தின் பிரதிபலிப்பாகவும் புதிய வருடத்துக்குள்ளாக கடந்து செல்வதற்கான பெலத்தைக் நமக்குக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

1. ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பது அவரை அறிவிக்கவே:- (வச 1,2)

இப்பகுதியில் தாவீது ஆண்டவரை நோக்கி, ‘‘எங்களுக்கு இரங்கும், எங்களை ஆசீர்வதியும், உமது முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்’’ என்று கெஞ்சுவதைக் காண்கிறோம். நாமும் இவ்வருடம் முழுதும் ஜெபிக்கும்பொழு தெல்லாம் ஆண்டவருடைய இரக்கத்திற்காக மன்றாடியிருப்போம். பல ஊழியக் காரர்கள் முன் போய் நின்று, கடவுள் நம்மை ஆசீர்வதிப் பதற்காய் அவர்களிடம் நம் தலையை நீட்டி, நம் பணத்தை காணிக்கை என்ற பெயரில் லஞ்சமாகக் கொடுத்திருப்போம். ஆனாலும், ஆண்டவரின் திருமுகப் பிரசன்னம் நம் மூலம் பிரகாசிக்கவேண்டும் என்பதில் கவலையற்றே இருந்திருக்கிறோம். எப்படியாயினும், ஆசீர்வா தத்தைக் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பல விடயங்களைச் செய்தி ருக்கிறோம். இவ்வாறாக, நாம் எப்படி வருடத்தைத் தொடங்கினோமோ அப்படியே வருடத்தை முடித்தும் இருக்கிறோம். ‘செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாத வைகளைச் செய்துவந்தோம், எங்களுக்குச் சுகமே இல்லை, ஆனாலும் ஆண்டவரே, நிர்ப் பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும்.’ என்று வாரந்தோறும் ஆலயத்தில் அறிக்கையிடுவதும் நமக்கு ஒரு பாரம்பரிய செயலாய்ப் போய்விட்டது.

தாவீதரசர் இந்த மன்றாட்டை இறைவனிடம் வைக்கும்போது அதற்காக தேவனிடம் அவர் கூறும் காரணமாக, ‘‘பூமியில் உமது வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உமது இரட்சண்ய மும் விளங்கும்படியாய்.’’ (வச-1) என்று குறிப்பிடுகிறார். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பது மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்காக மட்டுமல்ல, இயேசுவே ஆண்டவர் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே. நானும் என் குடும்பமும் நன்றாக வாழவேண் டும் என்ற குறுகிய மனப்பான்மையிலிருந்து நாம் வெளியேற இன்று அழைக்கப்படுகிறோம்.

அன்பர்களே! இந்த புத்தாண்டில், இயேசுவின் பிறப்பின் நற்செய்தியை நம் நண்பர்கள், உறவினர்கள், அருகிலுள்ளளோர் அனைவருக்கும் அக்கரையோடு அறிவித்து ஆண்டவரின் அளவில்லா ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம்.

2. நீதியுள்ள நியாதிபதி:- (வச 3-5)

‘‘தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர் (வச-4). ஆண்டவர், பாரபட்சம் இல்லாமல் எல்லோருக்கும் நீதி செய்கிறவர், மனுக்குலத்தார் அனைவரையும் சமமாக பாவிப்பவர் என்பதை இங்கு காண்கிறோம். இறைவனிடத்தில் எவ்வித பட்சபாதமும் இல்லை. அவர் ஒருவரை ஆதரிப்பதம் மற்ற வரை தண்டிப்பதும் இல்லை. அவர் அனைவரையும் தம் பிள்ளைகளாகவே கருதுகிறார். ஆகவே, ஒவ்வொரு வரும் அவரவரின் தெரிந்தெடுப்பு மற்றும் தீர்மானத்தின் அடிப்படையில் இயேசு கிறிஸ்து அருளும் மீட்பைப் பெற்றுக்கொள்ளும்பொழுது நிறைவாழ்வைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆதலால் மக்கள் ஆண்டவருடைய அருட்கொடையைப் பெற்றுக்கொண்டு, உரத்த சத்தத்து டன் மகிழ்ச்சியடைகின்றனர்’’ (வச-4), ‘‘தேவனைத் துதித்து கனப்படுத்துகின்றனர்’’ (வச-3,5).

3. கையின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பவர்:- (வச 6,7)

‘தேவன், இயேசு கிறிஸ்துவில் நமக்கு சகல ஆவிக்குறிய ஆசீர்வாதங்களையும் தருகிறவர்’ என எபே-1:3பி வசனத்தில் காண்கிறோம். உன்னத ஆசீர்வாதங்களோடு இம்மைக்குறிய ஆசீர் வாதங்களாலும் நம்மை நிரப்புகிறார் ‘‘பூமி தன் பலனைத் தரும்’’ (வச-6) என தாவீது இங்கு குறிப்பிடுகிறார். நமது கையின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பதன் மூலம் இம்மைக்குறிய ஆசீர் வாதங்களைத் தருகிறார் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியல்லவா? ‘‘கர்த்தரைத் தேடுகிறவர் களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது’’ (சங்-34:10) என்பது தாவீதுதின் நம்பிக்கையாகும்.

முடிவுரை:- அன்பிற்குரியவர்களே! ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்ட நீங்கள் அவருக்குப் பயந்திருந்து (வச-7), அவரது புகழை மக்களுக்கு அறிவித்து, மிகவும் அர்த்தமுள்ள மகிழ்ச்சியான ‘கிறிஸ்து ஜெயந்தி’ நாளைக் கொண்டாடஉங்களுக்கு எனது வாழ்த்துக்களும் ஜெபமும் உரித்தாகுக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-145 சரியான பதில் அளித்தோர்

1) ஏஞ்சல் சி. TIN
2) ஏஞ்சல் ஜெனி.ஃபா ஜெயந்த் CHE
3) ஏஞ்சல் ராஜதுரை CHE
4) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
5) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
6) அனிதா மோகன்ராஜ் ERO
7) அனி தேவ ஆதிரா VEL
8) அரோமா சாத்ராக் TIN
9) ஆர்தர் மாசில்லாமணி CHE
10) அருள்செல்வி VIR
11) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
12) பங்கஜம் வில்சன் CBE
13) பெல்சி தங்கராஜ் CHE
14) பெனிட்டா பிராங்க்ளின் CHE
15) பியூலா அலெக்ஸ் CHE
16) பியூலா ஜேசுராஜன் PON
17) செலினா பென்சி வில்சன் DR, KUW
18) சந்திராபாய் மாசிலாமணி AVD
19) சந்திரலேகா KAL-AP
20) சந்திரா சாமுவேல் TIN
21) சார்லஸ் ஃபின்னி DR. CHE
22) சார்லட் டேவிட் CHE
23) சிட்டி TR. TVL
24) செல்லம் சங்கீதா TIN
25) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
26) கிறிஸ்துதாஸ் GOP
27) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR
28) கிறிஸ்டி ஞானராஜ் CHE
29) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
30) டேனியல் தாமஸ் TIN
31) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
32) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
33) தெபோராள் ஆனந்தமணி CNG
34) டெல்பி பாத்திமா CHE
35) தேவமணி ஆபிரகாம் TUT
36) தேவநேசம் ராஜாசிங் CHE
37) டோராபாய் CHE
38) எலிசபெத் செல்லத்துரை CHE
39) எஸ்தர் D.R. TIN
40) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
41) குளோரா BBC BD TEN
42) ஞானம் ஜெபராஜ் TIN
43) ஞானஜோதி பேரின்பம் G. VIR
44) ஞானராணி G. PAN
45) ஞானரதி G. PAN
46) ஞானசெல்வி மோசஸ் CHE
47) கோல்டா ஜேசுபாதம் MUM
48) கிரேஸ் டேனி PCM
49) கிரேஸ் மனோன்மணி ஏனோஸ் CHE
50) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
51) கிரேஸ்லின் சாந்தி TIN
52) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
53) கிரேனா அன்புரோஸ் CHE
54) கிரேஸியா ஜெயபால் CHE
55) கிரிசெல்டா செய்லர் CHE
56) ஹெலன் ஜான்சிராணி TIN
57) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
58) ஹெலன் திலக் TUT
59) ஹேமா அஜீத் CHE
60) ஹேமா கேப்ரியேல் BAN
61) ஹிம்லா ராஜகுமாரி CHE
62) இளவரசி ஜோபிதா CBE
63) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
64) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
65) ஜமீலா செல்வராஜ் CHE
66) ஜேன்ஸ் ANM
67) ஜேன் தர்மராஜ் TIN
68) ஜான்ஸி சந்தியா MAR
69) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
70) ஜெபா கோல்டா TIN
71) ஜெபா ஜெயராஜ் AVD
72) ஜெபக்குட்டி மோசஸ் TIN
73) ஜெபசீலி கிளின்டன் CHE
74) ஜெபஸ்டின் ஜி. KNR
75) ஜெபா சீனி MKM
76) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
77) ஜெமீலா நிக்ஸன் CHE
78) ஜென்சி ஞானேஷ் MAR/MUM
79) ஜெனித்தா செல்வின் TIN
80) ஜெரின் ஸ்டீபன் CHE
81) ஜெஸி செல்லதுரை CBE
82) ஜெஸி ஜெயக்குமார் TIN
83) ஜெஸிக்கா MS TPT
84) ஜெயா ஆல்பர்ட் KUM
85) ஜெயா மங்களம் TIN
86) ஜெயக்குமாரி CBE
87) ஜோனா ஸ்டீபன் AVD
88) ஜோஸ் ஜேஸ்பர் MS TEN
89) ஜோஸ்பின் ஜெஸி CHE
90) ஜாய்ஸ் பாண்டியன் CHE
91) ஜூலியட் CHE
92) ஜூலியட் ஜெயக்குமார் TIN
93) கலா கிருபாகரன் TIN
94) கலையரசி செல்வராஜ் CHE

## வேதாகம போட்டி-145 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

95) கஸ்தூரி எலியாஸ் TIN
96) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
97) கிங்ஸ்லி தங்கமணி CHE
98) கிருபா சாந்தி AV. CHE
99) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
100) லதா மைக்கேல்ராஜ் CHE
101) லீலா டேவிட் CHE
102) லீலா ஜெபராஜ் THA
103) லீலா ஜோஸப் CBE
104) லில்லி ஜாண்ஸன் CHE
105) லிஸி டென்சிங் TIN
106) மல்லிகா V. CHE
107) மல்லிகா ஜாய்ஸ் TCY
108) மணிமேகலை ஜெயக்குமார் TIN
109) மனோகரம் தனராஜ் NAZ
110) மரிய பாப்பா CHE
111) மரியாள் JS TUT
112) மேபல் கிறிஸ்டியான் CHE
113) மெஜிலா ஜோஷ்வா TUT
114) மெர்சி தனராஜ் CBE
115) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
116) மெரிட்டா ஜெயபாலன் TCY
117) மியூரியல் புஷ்பராஜ் CHE
118) நகோமி நிர்மலா J CHE
119) நிக்ஸன் எவர்பிரைட் TIN
120) ஆலிவ் ஜெயபாலன் CBE
121) பாக்யபாய் ஆரோன் TIN
122) பமீலா எட்வின் KAN
123) பால் தங்கம் CHE
124) பெர்சி பால் பொன்சிங் SAW
125) பிங்கலின் தேவமலர் CHE
126) பிரேமா பூபாலன் AVD
127) பிரேமா ஜானி PCM
128) பிரேமா ஸ்டாலின் CHE
129) பிரின்ஸ் தயாநிதி CHE
130) பிரிசில்லா தாஸ் CHE
131) பிரிஸ்கில்லாள் சசி CBE
132) ரேச்சல் ஈஸ்டர் VEL
133) ராஜபிரமிளா TPT
134) ராஜ்மேரி சார்லஸ் KER
135) ரமோலா அதிசயராஜ் TIN
136) ராணி பிரபாகரன் TIN
137) ராணி சாமுவேல்ராஜ் CHE
138) ரத்னா டென்னிஸன் CBE
139) ரத்னாவதி பாண்டியன் CHE
140) ரெஜினா விக்டர் TIN
141) ரோஸ்லின் மார்கிரெட் CHE
142) ரோஸி ஸ்டீபன் CHE
143) ரூபவதி நோபிள் TIN
144) ரூபி ஜாண் நாடார் MUM
145) ரூபி ஜாண்ஸன் TIN
146) ரூத் ஜாண்ஸன் TIN
147) சலோமி மனோகர் DR. CHE
148) சாமுவேல் டேவிட் TPT
149) சாரா பாலசிங் MDU
150) சரோஜினி எலிசபெத் CHE
151) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
152) செல்வ பென்சி ஆபேல் KPM-AP
153) செல்வராணி ஆல்பர்ட் CHE
154) செல்வராணி G CHE
155) செல்வி அமிர்தராஜ் TVR
156) ஷாலி எடிசன் CHE
157) சாந்தி ஆல்பர்ட் PCT
158) சாந்தி ஜெபக்கனி KAL-AP
159) சாந்தி ரோஸ் CBE
160) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
161) ஷீபா சாம்ஸன் CHE
162) ஷெரீன் ஜெபராஜ் PAN
163) ஷோபா ஈ.ஃப்ரிராஜன் CHE
164) சவுந்தரம் சாலமோன் CHE
165) ஸ்ரீஜா ஃபிராங்க்ளின் CHE
166) ஸ்டெல்லா டேவிட் TUT
167) ஸ்டெல்லா கனகராஜ் CHE
168) ஸ்டெல்லா சூசையா TUT
169) சுகிர்தா ஆல்வின் CHE
170) சுகிர்தா சின்னதுரை TIN
171) சுஜாதா சாமுவேல் CHE
172) சுமித்ரா B. CHE
173) சுசீலா தியோடர் TCY
174) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
175) தனசீலி ஞானராஜ் CHE
176) தாரா மாணிக்கம் CHE
177) தெல்மா ஸ்டேன்லி MDU
178) உமா குளோரி CHE
179) வனஜா ஹெர்பர்ட் TIN
180) வசந்தா அன்பன் TIN
181) வசந்தா சந்திரசேகர் CBE
182) வசந்தி கருணாகரன் CHE
183) வசந்தி வாசன் CHE
184) விஜயராணி A. CHE
185) விஜி டேனியல் CHE
186) விமலா ஜெயக்குமார் TUT
187) விண்ணரசி ரோஸ் CHE
188) வினோலியா ஜேம்ஸ் KOV
189) வைலட் கிறிஸ்டோபர் TIN
190) வைலட் சைரஸ் CHE
191) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW  PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் டிசம்பர் – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள் : 09–12–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம் : காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள் : 18–12–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம் : மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள் : 23–12–2022 நான்காம் வெள்ளி<br>நேரம் : இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# அட்வென்ட் காலம்

## Sunday, the 27th November 2022 – Saturday, the 24the December 2022

‘அட்வென்ட்’ என்பது லத்தீன் மொழியில் ‘வருகை’ என பொருள்படும். கிறிஸ்தவ திருச்சபை நாட்காட்டியில், ‘கிறிஸ்துமஸ்’ எனப்படும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்கான தயாரிப்பு காலம் மற்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான தயாரிப்பு ஆகும். மேற்கத்திய திருச்சபைகளில், அட்வென்ட் காலம் நவம்பர் 30ம் தேதிக்கு அருகில் உள்ள ஞாயிற்றுக்கிழமை (அதாவது தூய. ஆண்ட்ரூ தினத்தன்று) தொடங்குகிறது, மேலும் அட்வென்ட் என்பது கிறிஸ்தவ வழிபாட்டு ஆண்டின் தொடக்கமாகும். பல கிழக்கத்திய திருச்சபைகளில், இது கிறிஸ்மஸ்-க்கு முன் 40-நாட்கள் நிகழும் உபவாசம் மற்றும் தயாரிப்பின் நாட்களாகும். அட்வென்ட் காலமானது முதன்முதலாக கடைபிடிக்கப்பட்டது எப்போது என்பது உறுதியாகத் தெரியவில்லை. பிஷப் பெர்பெட்டஸ் ஆ.ஃப் டூர்ஸ் (461–490) நவம்பர்-11ம் தேதியை (செயின்ட் மார்ட்டின் தினம்) அடவென்ட் உபவாசமாக நிறுவினார், மேலும் ‘டூர்ஸ் கவுன்சில்’ கி.பி.567-ல் அட்வென்ட் பருவம் குறித்து குறிப்பிட்டுள்ளது.

ரோமன் கத்தோலிக்க திருச்சபை உள்ளிட்ட பல திருச்சபைகளின் அட்வென்ட் பாரம்பரிய வழிபாட்டு வண்ணம் வயலட் ஆகும். பல புராட்டஸ்டன்ட் திருச்சபைப் பிரிவுகள் நீலம் அல்லது ஊதா நிறத்தை ஏற்றுக்கொண்டன. அட்வென்ட்டின் மூன்றாவது ஞாயிறு, ‘கௌடெட் ஞாயிறு’ என்று அழைக்கப்படுகிறது, இந்த 3ம் ஞாயிறு மாத்திரம் பொதுவாக ரோஜா நிற ஆடைகள் மற்றும் மெழுகுவர்த்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் வருகை சமீபமாயிருக்கிறது என்ற உணர்வோட அட்வைன்டை ஆசரிப்போம்.

வேதபகுதி
பிரசங்கி
முழுதும்

# வேதாகம போட்டி-146

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

**பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்**

பதிலளிக்க
கடைசி நாள்
டிசம்பர்-25

1. தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும் விழுந்த இடத்திலே கிடப்பது என்ன?
2. அதிக ஞானத்திலே இது அதிகமுண்டு. இது என்ன?
3. தேவனுக்கு பயந்து, கற்பனைகளை கைக்கொள்வது யார் மேல் விழுந்த கடமை?
4. மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்தது என்ன?
5. யார் இருதயம் வலதுகையிலும் யார் இருதயம் இடதுகையிலும் இருக்கும்?
6. தன் கைகளை கட்டிக்கொண்டு தன் சதையையே தின்கிறான் - இவன் யார்?
7. நேர்ந்துகொண்டதை செய்யாமற்போவதைப் பார்க்கிலும் எது நலம்?
8. தங்கள் கிரியைகளுடன் தேவனுடைய கைவசமாய் இருக்கிறவர்கள் யார், யார்?
9. தெற்கே-போய், வடக்கே-சுற்றி சுழன்று அடித்து, சுற்றின இடத்துக்கு திரும்புவது எது?
10. மாயை மாயை, எல்லாம் மாயை, என்று சொல்லுகிறவர் யார்?
11. பானையில் கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பை போல் இருப்பது எது?
12. உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும் பாக்கியவான்கள் யார்?
13. எதைப் பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி?
14. தன்னை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவது எது?
15. பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும் - இது என்ன?
16. அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல அநேக வார்த்தைகள் எப்படியிருக்கும்?
17. உயர ஏறும் ஆவி எது? தாழப் பூமியில் இறங்கும் ஆவி எது?
18. ஒரு காரியத்தை செம்மையாய் செய்வதற்கு இதுவே பிரதானம் - இது என்ன?
19. முக-துக்கத்தினாலே சீர்ப்படுவது எது?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

DESCENDANT OF DAVID APOGONOS TOU DAVID

## நம்முடைய இரட்சண்ய கன்மலை

EPISODE - 43 அபோகோனாஸ் டோவ் டேவீட் பாகம் - 43

தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்பதை நினைவில் கொள். 2தீமோ–2:8

Remember, Jesus Christ the descendant of David was raised from the dead as per my gospel. 2 Tim-2:8

நம்முடைய கர்த்தராகிய இயேசு கறிஸ்துவின் பிதாவாகிய தேவனுடைய நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள். கிறிஸ்துவின் மீது நம்பிக்கை உண்டாகும்படி, நம் வாழ்வில் முடிந்தது என முற்றுப்புள்ளி வைத்தவை களை துவக்கிவைக்க வருடத்தின் இறுதியில் பிறந்த தாவீதின் வழித்தோன் றலை மகிமைப்படுத்துவோம். ஈசாயின் வேராய் புறஜாதிகளையும் ஆளும்படிக்கு பூமியில் தோன்றிய கிறிஸ்துவே! உமக்கு ஸ்தோத்திரம். புறஜாதிகளுக்குள்ளே உம்முடைய நாமத்தைச் சொல்லி, உம்மை அறிக்கைபண்ணி, சங்கீதம் பாடும்படி எங்களைத் திருச்சபையில் சேர்த்தவரே! உம்மைப் புகழ்கிறோம்.

லூக்-1:75, 32 தமது தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார். தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காச னத்தை அவருக்குக் கொடுப்பார். கிறிஸ்து நம்மை ஆளுகை செய்வார் நாமும் அவருடைய இரட்சிப்பை பறைசாற்றுவோம்.

எபி-13:8 இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்.

அப்-28:31 பவுலடியாரை அன்று வழிநடத்திய இயேசு கிறிஸ்து இன்றும் நாம், மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தின் சுசேஷத்தை உபதேசிக்கும்படி நேர்த்தியாய் நம்மை நடத்துவார்.

லூக்-18:37,38,42 'தாவீதின் குமாரனே இரங்கும், தாவீதின் குமாரனே இரங்கும்' என அதிகமதிகமாய் கூப்பிட்டும்போது நம் விசுவாசத்தைப் பாராட்டி நம்மை இரட்சிப்புக்கு நேராய் வழிநடத்துவார்.

கொலோ-3:4 தாவீதின் வம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்து மகிமையில் வெளிப்படும் போது நாமும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவோம்.

ஜெபம்: தேவனுக்கும் ஜனங்களெல்லாருக்கும் முன்பாக செய்கையிலும், வாக்கி லும், வல்லமையிலும் வெளிப்பட்ட தாவீதின் குமாரனாம் கிறிஸ்துவே, உம்மைத் துதிக்கிறோம் ஸ்தோத்தரிக்கிறோம். உம்முடைய பரிபூரணத்தினால் நாங்கள் கிருபைமேல் கிருபை பெற்றுக்கொள்ள உம் மூலமாய் கிருபை உண்டானதற்காய் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–139*. . .

# இயேசு கிறிஸ்துவின் அதிசயம்



சகோ. அசரியா

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.

பிரதிபா, 9ம் வகுப்பு படிக்கும் ஒரு சிறுபெண். அவளது தந்தை ஜோஸப், கூலி வேலை செய்யும் ஒரு தொழிலாளி. பிரதிபாவின் பெற்றோர் ஏழ்மை நிலையில் இருந்ததால் அவளுக்கு சரியான உணவு இல்லை, என்றாலும், அவள் அறிவுக்கூர்மை உள்ளவளாக, தன் வகுப்பில் முதல் மாணவியாகத் திகழ்ந்தாள். அணிவதற்கு நல்ல உடைகள் மற்றும் தங்குவதற்கு நல்ல உறைவிடம் இல்லாத நிலையிலும், அவள் இயேசு கிறிஸ்துவை உறுதியாயப் பற்றிக்கொண்டு தேவனுக்குப் பயந்த மகளாய் இருந்த படியால், சகலத்தையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற தேவன் மற்றவர்கள் மத்தியில் குறைவுபடாமல் அவளை ஆச்சரியமாய் வழிநடத்தினார்.

குறிப்பிட்ட ஒரு வருடம் கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. பிரதிபா, "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்." (சங்-55:22) என்ற வேதவசனத்தின்படி இயேசுவின்மேல் தன் கவலைகளை வைத்துவிட்டு, கிறிஸ்மஸ் புத்தாடைகள், பட்டாசுகள், குடும்பத்திற்கு தேவையான சிறந்த உணவு அனைத்தையும் பரமதகப்பன் தருவார் என உறுதியாய் நம்பி ஜெபித்துக்கொண்டிருந்தாள். பிரதிபாவின் ஊக்கமான வேண்டுதலை கர்த்தர் கேட்டார். கிறிஸ்மஸ்-க்கு 5-நாட்களுக்கு முன் அவள் வீட்டிற்கு அருகில் வாழ்ந்த பெரும் பணக்காரரான ஒரு தேவமனிதர் அவளுக்கு தேவையான புத்தாடைகள், பட்டாசுகள், குடும்பத்துக்குத் தேவையான உணவுகள் ஆகியவற்றை கொண்டுவந்து கொடுத்தார். மட்டுமல்ல, பிரதிபா இயேசுவிடம் வேண்டிக்கொள்ளாத பொருளான, ஒரு நேர்த்தியான கைக்கடிகாரத்தையும் (Wrist-watch) பரிசாகக் கொடுத்தார். இதனால் மிகவும் மகிழ்ந்த பிரதிபாவும் அவளது பெற்றோரும் இது 'இயேசு கிறிஸ்துவின் அதிசயம்' என்று சொல்லி இயேசுவுக்கும் அந்த தேவமனிதருக்கும் நன்றி சொல்லி பண்டிகையை சந்தோஷமாகக் கொண்டாடினார்கள்.

பிரியமானவர்களே, நம் வாழ்வில் கூட கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட முடியாத நிலையில் வாழும் மக்களுக்கு உதவி செய்வோமானால் அவர்களும் கிறிஸ்மஸ் பண்டிகையில் இயேசுவின் அன்பை அதிகமாக அறிந்து கொள்ளமுடியும். மட்டுமல்ல, ஏழை-எளிய மக்கள், வியாதி-கவலை-கண்ணீரில் வாழ்பவர்களுக்கு தேவையான உதவிகளை நாம் செய்வோமானால் அதற்கேற்ற பலனை இயேசு இரட்சகர் நமக்கு தருவார். பிரதிபா போன்று வாழ்வின் விளிம்பில் வாழும் மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களை எடுத்துச் செல்ல இந்த கிறிஸ்மஸ் காலத்தில் நம்மை அர்ப்பணிப்போம். வேதம் சொல்லுகிறது...

கர்த்தர் செய்த அதிசயங்களையும் அவருடைய அற்புதங்களையும் நினைவுகூருங்கள். சங்–105:6

கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். சங்–69:33

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். நீதி–19:17

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed. Editor, 'Ratchippu' Magazine. Mobile No.: 9962924900

EPISODE 5

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-1 பகுதி-5**

1. இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்.

5. ஆதாரங்களின் சுருக்கம்

இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம் குறித்து

பல்வேறு ஆதாரங்களையும் கடந்த நான்கு மாதங்களாக அறிந்துகொண்டோம். முழு வரலாறு றிற்கும் முக்கியத்துவம் வாய்ந்தது தாமஸ் கிறிஸ்தவர்களுடைய பண்டைய திருச்சபையின் வரலாறுதான். அனைத்து ஆதாரங்களையும் சேகரித்து சல்லடை-போட்டு ஆய்வுசெய்த சரித்திர ஆய்வாளர்கள் அது நிச்சயம் அற்றதாக வும் யூகங்களை உள்ளடக்கியதாகவும் உள்ளது என்று தெரிவித்தார்கள்.

மற்ற இடங்களில் நிச்சயமில்லையென்றாலும் தென்னிந்தியாவில் கிறிஸ்தவம் கி.பி. 6-ம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பின்னர் அல்லாமல், கணிசமான வருடங்களுக்கு முந்தைய தேதியிலிருந்து இருந்திருக்க வேண்டும்.

சில பகுதிகளில் நன்கு நிறுவப்பட்ட தேவாலயங்கள் இருந்தன என்பது சந்தேக மின்றி உறுதியாகிவிட்டது. இவை குறைந்த பட்சம் வெளிநாட்டினரின் தேவால யங்களாக இருந்தி ருக்கலாம். ஏனெனில் தேவாலயங்கள் பல்வேறு அளவுகளில் சிரியாக் மொழி-வழியில் தொழு கையும் மற்றும் வெளிநாட்டு பாதிரியார்கள் மற்றும் ஆயர்களால் பராமரிக்கப்பட்டிருந்ததும் சந்தேகத்துக்கு இடமில்லாத ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

புனிதர் தாமஸ், மயிலாப்பூரில்தான் முதல் கிறிஸ்தவ அருட்பணி தொடங்கியது என்று கூறுகிறார். ஆனால் தாமஸ் தொடர்புடைய பாரம்பரியத்தின் தொடர்ச்சி மிகவும் ஆரம்ப காலத்திற்கு செல்கிறது. ஏற்கனவே இந்தியாவில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்க வாய்ப்பு உள்ளது நான்காவது நூற்றாண்டு முதல் பாதியில் கணிசமான கிறிஸ்தவ குடியேற்றத்தால் இந்திய கிறிஸ்தவம் பலப்படுத்தப்பட்டது.

பல நூறு ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள பூர்வீக தனிமத்தின் ஒரு பகுதியாக வாவது கிறிஸ்தவர்கள் இருந்திருக்கலாம். மற்றும் குறைந்தபட்சம் புலம் பெயர்ந் தோர் இங்கே வந்து சேர எண்ணி இங்கு வந்திருக்கலாம். அவர்கள் இருந்த கிறிஸ்தவ குழுக்களுக்கு அவர்களை ஏற்கனவே தெரியும். திருச்சபையானது ஆரம்பமுதற்கொண்டே கேரளாவிற்கு சொந்தமானது அல்ல, ஆனால் பாண்டிய ராஜ்யத்திற்கு சொந்தமானது. வரலாற்றில் இந்தியாவின், இன்னபிற பகுதிகளில் கிறிஸ்தவ சமூகங்கள் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. ஆனால் வரலாறு அதன் தொடர்ச்சியை பரிந்துரைக்கவில்லை.

தென்னிந்திய பகுதியில் கிறிஸ்தவத்தின் தொடக்கம் பற்றி உறுதியான சான்றுகள் உள்ளன. கேரளா பகுதியில் கிறிஸ்தவத்தின் சரித்திரம் தெளிவான உண்மையின் வெளிச்சத்தில் ஒரு வளமான, செல்வந்த சமூகமாக உள்ளது. அது ஆட்சியாளர் களின் தயவை அனுபவித்து, பாதுகாப்பிற்கான உத்தரவாதத்துடன் இருந்ததாகத் தெரிகிறது. இந்திய கிறிஸ்தவர்களின் சமூகம் கிறிஸ்தவம் அல்லாத சமூகத்தின் மத்தியில் தன் நம்பிக்கையை பிரச்சாரம் செய்ய மேற்கொண்ட முயற்சிகளுக்கு தெளிவான மற்றும் அசைக்க முடியாத வரலாற்றுச் சான்றுகள் இருந்தது குறிப்பிடத்தக்க மற்றும் கோடிட்டுக் காட்டத்தகுந்த அம்சமாகும்.

கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் நம்மிடம் அப்படிபட்ட தான வரலாற்று சான்று எதுவும் இல்லை. ஆனால் தாமஸ் தொடர்பான பாரம் பரியத்தின் தெளிவான வரலாறு, ஆதாரம் என்று அழைக்கப்படலாம்.

இந்திய கூட்டமைப்பில் இடம்பெற்ற ஆனால் அன்று இந்தியா என அழைக்கப் படாத பல நாடுகள் இருந்த இருண்ட காலகட்டத்தில் அப்போஸ்தலன் தாமஸ் இந்தியாவுக்கு வந்திருக்கலாம் என்றும் அவரால் நிறுவப்பட்ட ஏழு தேவாலயங் களுக்குள்ளும் இந்த பாரம்பரியம் நீடிக்கிறது என்றும், இந்தியாவில் சுமார் பதினேழு வருடங்கள் அவர் போதித்துள்ளார் என்றும் கூற முடியும். இதை ஆதரிக்க மிக உறுதியான வரலாற்று ஆதாரங்கள் இல்லாததற்கு வருந்துவோம்.

தென்னிந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலன் தாமஸ்தான் கிறிஸ்தவ நிறுவனர், தாமஸ்தான் இந்திய கிறிஸ்தவ சரித்திர வரலாற்றாசிரியர் என்பதில் உறுதியாக உள்ளனர். தங்கள் நம்பிக்கையில் தவறு இருப்பதாக அவர்களுக்கு நிரூபிக்க முடியாது. இதற்கான சான்று அவர் நிறுவிய தேவாலயங்கள்தானே தவிர வேறு யாருமல்ல.

வரலாற்று ஆய்வுகள் இந்த விஷயத்தில் அவர்களை எச்சரிக்கும் உரிமையின்றி அவர்களை மகிழ்விக்கும் நம்பிக்கைக்கு சமமான நம்பிக்கையுடன் பல நூற்றாண்டுகளாக தென்னிந்தியாவின் தாமஸ் பாரம்பரிய கிறிஸ்தவர்களின் மற்றும் கத்தோலிக்கர்களின் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கேரளாவும் தமிழ்நாடும் விளங்குவதாக குறிப்பிடுகிறது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, பூமி-அதிர்ச்சி, எரிமலை, காட்டுத்-தீ போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்தும், பிரிவினைவாதம் - தீவிரவாதங்களி லிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம் முடிவுக்குவர... ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களையும் சமமாய் நடத்த... விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட... மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிதியை ஒன்றிய அரசு பாரபட்சமின்றி வழங்க... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... மக்களை பிரித்தாள சூழ்சிசெய்யும் இயக்கங்கள் வேரறுக்கப்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... தமிழக மக்கள் அனைவரும் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-பிரிவினைவாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட... புயல் - மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகள் நீங்க...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோ ருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.்.ப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ் டினா, ஜோ.்.ப்னா, ஜெனிபர், கி.்.ப்ட்லின், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறப்பான ஞானம் வழங்கப்பட...

6) திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஜாஸ்மின் ஞானதாஸ், திருமதி. எஸ்தர், திருமதி. ்.பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந் திரன், திருமதி. ஈவ்லின் சிப்பெர், திருமதி. எபனேசர், திருமதி. லீலா மனோகர சிங், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தின பாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திரு. சிவகுமார், திருமதி. சாந்தி, திருமதி. சுந்தரிபாய், திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மங்களராணி ஞானப்பிரகாசம், திருமதி. ஹேமலதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. அலீஸ் ரெஜினாபாய் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திருமதி. சுவர்ணலதா அற்புதராஜ், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோர் குடும்பங்களுக்காக...

# வேதாகம போட்டி-145 (நீதிமொழிகள்)

## சரியான விடைகள்

1. கர்த்தருக்கு நீதி:-19:17
2. இனிய சொற்கள் நீதி:-16:24
3. மதுபானம் நீதி:-23:31
4. கர்த்தரின் வழி நீதி:-10:29
5. தக.தாயை தூஷிப்பவன் நீதி:-20:20
6. சிலந்திப்பூச்சி நீதி:-30:28
7. ஞானம்-புத்தி நீதி:-3:19
8. அருவறுப்பானது நீதி:-28:9
9. கர்.பயம், ஞான.போத 14:27, 13:24
10. மூடபுத்திரன் நீதி:-17:25
11. குண. ஸ்திரீ நீதி:-31:10
12. கோபத்தை நீதி:-21:14
13. ஞானம் நீதி:-1:20
14. துரோ.நம்புவது நீதி:-25:19
15. வெட்கத்தை நீதி:-29:15
16. துன்மார்க்கன் நீதி:-5:22,23
17. ஐசுவ-மகிமை-ஜீவன் நீதி:-22:4
18. அழிம்பனுக்கு நீதி:-18:9
19. நீதியின் பாதையில் நீதி:-12:28
20. வாயை-நாவை நீதி:-21:23

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463



## கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்



**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார், தபால்-துறை மற்றும் அச்சக நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்களது உள்ளம் கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 09th December 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் கால இரவு நேரங்களில் வண்ண விளக்குகளுடன் பயணிக்கும் ‘‘டார்ட்மவுத் நீராவி - கிறிஸ்துமஸ் ரெயில்’’ இவ்வாண்டின் தனது 5-வார கால சேவையை நவ-25ல் தொடங்கியிருக்கிறது.

2. பழமையான வாகனங்களை அழிக்கும் ‘வாகன ஸ்கிராப்பிங்’ கொள்கைப்படி, முதல் கட்டமாக 15-ஆண்டு பழமையான ஒன்றிய அரசின் வாகனங்கள் அனைத்தும் அழிக்கப்படும் என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்காரி தகவல்.

3. தமிழ் வளர்ச்சிக்கு பாடுபடும் அறிஞர்களைச் சிறப்பிக்க, 24-வகை விருதுகளை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இவ்விருதுகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் டிச.23 என தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை தகவல்.

4. பிஸ்லரி நிறுவனத்தை ரூ.7,000 கோடிக்கு வாங்குகிறது டாடா குழுமம். தம்ஸ்-அப், லிம்கா, கோக் பிராண்டுகளைத் தொடர்ந்து தற்போது ‘பிஸ்லரி’ பிராண்டையும் விற்பனை செய்கிறார் ‘பார்லே-பிஸ்லரி’-யின் தலைவர் ரமேஷ் சவுகான்.

5. விம்பிள்டன் டென்னிஸ் - வெள்ளைநிற உடை விவகாரம்: பெண்களுக்கான தளர்வுகள் அறிவிப்பு. இனி விம்பிள்டனில் வீராங்கனைகள் மாத்திரம் தாங்கள் விரும்பிய நிறத்தில் கால்சட்டைகளை (ஷாட்ஸ்) அணியலாம் என அறிவிப்பு.

Posted on: 09th December 2022

To

If undelivered Please return to:

REV.S.J.D. DHARMARAJA
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.